2024 – நவம்பர் மாதம் 07– ஆம் தேதி வியாழக்கிழமை

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பெரம்பலூர்.

*எம்.சி.ஓ.பி. நெம்பர் : 23 / 2023*

*2024–ம் ஆண்டு நவம்பர் மாதம் 07– ஆம் தேதி வியாழக்கிழமை மனுதாரர்/எதிர்மனுதாரர் தரப்பு சாட்சியாகிய P W 1, வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டின் 54–வது விதியின் 9 –வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி. N. லலிதா,* Gr.II Bench Clerk *அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.*

| | | |
|---|---|---|
| பெயர் | : | P W 1, இரத்தினசாமி |
| தகப்பனார் பெயர் | : | பெருமாள் |
| ஊர் | : | தொண்டமாந்துறை, மேற்கு(அஞ்சல்),<br>விஜயபுரம் கிராமம், தெற்கு தெரு, |
| வட்டம் | : | வேப்பந்தட்டை |
| மாவட்டம் | : | பெரம்பலூர் |
| தொழில் | : | ஓட்டுநர் |
| வயது | : | 45 |

**தேதி: 07.11.2024.**

**முதல் விசாரணை**:-

நான் இந்த மனுவில் மனுதாரர் ஆவேன். மனு விபரங்கள் குறித்து நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கின்றேன். நான் இன்று தாக்கல் செய்யும் என்னுடைய நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை நன்கு தெரிந்து கையொப்பம் செய்துள்ளேன். அதை என் சாட்சியமாக ஏற்கவேண்டுகின்றேன். எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் கீழ் கண்ட ஆவணங்களை மனுதாரர் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்து கொள்ள வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

**எனது சார்பாக :–**

**1).** 03.06.2022–ம் தேதியிட்டு அரும்பாவூர் காவல் நிலைய குற்ற எண் 125 / 2022–ன் கீழ் இதச பிரிவுகள் 279, 337–ன் படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை உண்மை நகல் & சட்டப்பிரிவு மாற்றல் அறிக்கையின் ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.1.**

**2).** 01.06.2022 முதல் 09.06.2022 வரை பெரம்பலூர் SPT மருத்துவமனையில் எனக்கு வழங்கப்பட்ட Discharge Summary அசல் **ம.சா.ஆ.2.**

3).12.12.2022 முதல் 23.12.2022 வரை பெரம்பலூர் SPT மருத்துவமனையில் இருந்து வழங்கப்பட்ட மருத்துவ விடுவிப்பு சான்று அசல் **ம.சா.ஆ.3.**

4). பெரம்பலூர் SPT மருத்துவமனையில் இருந்து என் பெயருக்கு வழங்கப்பட்ட மருத்துவ பில்கள் 94 – எண்ணிக்கைகள் கொண்டது, ரூ.2,46,000/–க்கானது அசல் **ம.சா.ஆ.4. (2–ம் எதிர்மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் ஆட்சேபனையின் பேரில் குறியீடு செய்யப்படுகின்றது)**

5). எனது ஆதார் அட்டையின் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது அது **ம.சா.ஆ.5.**

6).எனது ஓட்டுநர் உரிமம் ஜெராக்ஸ் நகல் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகின்றது அது **ம.சா.ஆ.6.**

7). 1–ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் பதிவுப்புத்தகத்தின் ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.7.**

8). 1–ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் வாகனக்காப்பீடு ஜெராக்ஸ் நகல் **ம.சா.ஆ.8.**

9), எனக்கு வழங்கப்பட்ட ஊனச்சான்றிதழ் **நீ.ம.சா.ஆ.1** ஆகும்.

ஆக தாக்கல் செய்கின்றேன். எனது சாட்சியம் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொண்டு மனுப்படி உத்தரவாக வேண்டுகின்றேன்.

**குறுக்கு விசாரணை:– (2–ம் எதிர்மனுதாரர் தரப்பில்)**

எனக்கு கையெழுத்து போட மட்டும் தெரியும், எழுதப்படிக்க தெரியாது. விபத்து சமயத்தில் TN 46 X 1605 என்ற இருசக்கர வாகனத்தை நான் ஓட்டிச்சென்றேன். என்னுடன் எனது மனைவி முத்துலட்சுமி பின் இருக்கையில் அமர்ந்து வந்தார். விபத்தில் எனது மனைவி முத்துலட்சுமிக்கு லேசான காயம் ஏற்பட்டது. எனது மனைவி முத்துலட்சுமி இழப்பீடு கேட்டு மனு தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. விபத்து ஏற்பட்டவுடன் போலீசார் வந்து என்னிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து கொண்டார்கள். எனது புகாரில் 1–ம் எதிர்மனுதாரர் வாகனம் எதிரே வந்து மோதியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்திற்கு பின்னிட்டு நான் பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் நானும், எனது மனைவி

முத்துலட்சுமியும் சிகிச்சைக்காக சேர்ந்தோம். எனது விபத்து பதிவேட்டையோ, எனது மனைவி முத்துலட்சுமியின் விபத்து பதிவேட்டையே நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். இந்த வழக்கில் விபத்து பதிவேட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாததற்கான காரணம் என்னவென்றால் தெரியவில்லை. தாக்கல் செய்யாததற்கான காரணம் குறித்து நிரூபண வாக்குமூலத்தில் சொல்லவில்லையென்றால் சரிதான். விபத்து பதிவேட்டில் நான் முன்னால் சென்ற வாகனத்தில் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளதால் தான் அந்த விபத்து பதிவேட்டு நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லையென்றால் சரியல்ல. அதன் பின்னிட்டு எஸ்பிடி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். 09.06.2022–ம் தேதி எஸ்பிடி மருத்துவமனையில் இருந்து என்னை வெளியேற்றினார்கள். மீண்டும் அந்த எஸ்பிடி மருத்துவமனைக்கு எதற்காக போனேன் என்றால் எனக்கு தொடையில் வைத்திருந்த பிளேட் வளைந்து விட்டதால் அதை எடுத்து விட்டு ராடு போட்டு விட்டார்கள். 23.12.2022 அன்று என்னை மருத்துவமனையில் இருந்து விடுவிப்பு செய்து விட்டார்கள் என்றால் சரிதான். 23.12.2022–க்கு பிறகு நான் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். நான் தொடர் சிகிச்சை எடுத்துக்கொள்ளவில்லையென்றால் சரியல்ல. விபத்திற்கு பின்னிட்டு இரண்டு நாட்கள் கழித்துதான் போலீசார் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.6 ஓட்டுநர் உரிமம், போக்குவரத்து வாகனம் ஓட்டுவதற்கு 27.04.2026 வரையிலும், போக்குவரத்து இல்லாத வாகனங்கள் ஓட்டுவதற்கு 26.09.2030 வரையிலும் செல்லத்தக்கது என்றால் சரிதான். விபத்து நடந்த போது நான் பேட்ஜ் எடுக்கவில்லையென்றால் சரியல்ல. இலகுரக வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் மட்டுமே வைத்திருந்தேன் என்றால் சரிதான். எனக்கு நிரந்தர ஊனம் எதுவும் ஏற்படவில்லையென்ற காரணத்தினால் தான் எனக்குறிய ஓட்டுநர் உரிமத்தை நான் ரத்து

செய்யவில்லையென்றால் சரியல்ல. என்னுடைய வாகனம் மோட்டார் வாகன ஆய்விற்குட்படுத்தப்பட்டது. அந்த மோடடார் வாகன ஆய்வின் போது ம.சா.ஆ.6 ஓட்டுநர் உரிமத்தை தான் காட்டினேன். என்னால் வாகனத்தை ஓட்ட முடியாது என்ற காரணத்தினால் எனது ஓட்டுநர் உரிமம் ரத்து செய்யப்பட்டதா என்றால் இல்லை. நான் தற்போதும் வாகனம் ஓட்டிக்கொண்டு தான் இருக்கின்றேன் என்றும், எனக்கு ஏற்பட்ட காயங்கள் பூரணமாக குணமடைந்து விட்டது என்று சொன்னால் சரியல்ல. 1-ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் ஓட்டுநர் உரிமத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கிற்கு பின்னிட்டு போலீசார் விசாரிக்கவில்லை. நான் தான் முன்னால் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றும், என் மீது தவறு இருப்பதால் தான் போலீசார் விசாரிக்கவில்லையென்றும்,இறுதி அறிக்கை தாக்கல் செய்ய வில்லையென்றும் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் ரூ.20,000/- சம்பாதித்து வந்ததாக சொல்லியுள்ளதற்கு ஆதரவாக ஆவணம் தாக்கல் செய்யவில்லையென்றால் சரிதான். இந்த விபத்திற்கு முழு காரணம் நான் தான் என்றும், 1-ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டுநர் உரிமம் இல்லாமல் ஓட்டி காப்பீடு விதி மீறல் இருப்பதாலும் இந்த மனு 2-ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய வாகனத்திற்கு முன் பகுதி தான் சேதம் ஆகி உள்ளது என்றால் சரிதான். நான் தான் வேகமாக வாகனத்தை ஓட்டிச்சென்று முன்னால் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்படுத்தி விட்டேன் என்றும், இழப்பீடுபெறவேண்டும் என்ற எண்ணத்தில் 1-ம் எதிர்மனுதாரர் வாகனம் மோதியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறு விசாரணை:- இல்லை.**</u>

**ஒப்பம் /- சி. சங்கர்,**
**தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்,**
**பெரம்பலூர்.**